GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4A**

**6551–25**

(For the candidates admitted from 2017-2018 to 2022-2023)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

# LAW OF EVIDENCE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the legal presumptions as to documents produced as evidence in courts.

   சான்றாக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது அது குறித்த சட்ட ரீதியான துணிபுகளை விளக்குக.

2. Is direct evidence superior or inferior to circumstantial evidence? Explain with decided cases.

   நேரடிச் சான்று சூழ்நிலைச் சான்றை விட மேலமையானதா அல்லது கீழமையானதா? தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் விளக்குக.

3. "Cross examination though very powerful is also very dangerous weapon" – Explain.

   "குறுக்கு விசாரணை என்பது சக்திமிக்கதாயினும் மிகவும் ஆபத்து நிறைந்த ஆயுதம் ஆகும்" - விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of "Res gestae".

   "ஒன்றிய நிகழ்மை" கோட்பாட்டினை விளக்குக.

5. Explain "Patent" and "Latent" ambiguity.

   "உட்கிடை" மற்றும் "வெளிப்படை" பொருள் மயக்கம் பற்றி விளக்குக.

6. What are the kinds of privileged communications?

காப்புடைச் செய்திகளின் வகைகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) De novo trial

புத்துரு விசாரணை

(b) Electronic record

மின்னணு ஆவணம்

(c) Secondary evidence

இரண்டாம் நிலை சான்று

(d) Doctrine of 'Corpus delicti'

'சடலமே சாட்சி' கோட்பாடு

(e) Retracted confession

மறுத்தளிக்கப்பட்ட குற்ற ஏற்புரை

(f) Dumb witness

ஊமை சான்றுரைஞர்

(g) Ancient document

தொன்மையான ஆவணம்

GOVERNMENT LAW COLLEGE, TR...
LIBRARY

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', an accomplice, gives a statement of a robbery in which he took part. He describes various incidents unconnected with the robbery. Discuss the admissibility of such evidence.

உடந்தைக் குற்றவாளியான 'அ' என்பவர் தாம் பங்கெடுத்துக் கொண்ட கொள்ளையைப் பற்றி வாக்குமூலம் தருகிறார். கொள்ளைக்குத் தொடர்பில்லாத பல்வேறு நிகழ்ச்சிகளை விவரிக்கிறார். இச்சான்று அனுமதிக்கத்தக்கதா என்பதனை விவாதிக்கவும்.

9. The question is as to the date of birth of 'A'. 'A' tries to prove through the diary of a deceased surgeon. Is it admissible?

'A'யின் பிறந்த தேதி குறித்த வழக்கில், இறந்துவிட்ட மருத்துவரின் நாட்குறிப்பை சமர்ப்பித்து நிரூபிக்க 'A' முனைகிறார். இது ஏற்புடையதா?

10. Colleagues of the workplace treated 'A' and 'B' as husband and wife. Decide the relevancy of these facts.

பணிபுரியும் இடத்தில் உள்ள சக ஊழியர்கள் 'A' மற்றும் 'B' இருவரையும் கணவன் மற்றும் மனைவியாகவே கருதுகின்றனர். இந்நிகழ்மையின் தொடர்புடைமையை தீர்மானிக்க.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

TA4B

**6763–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Administrative Law is the law relating to the administration. It determines the organisation, powers and duties of administrative authorities". – Elucidate.

   ஆட்சி முறைக்கு சம்பந்தமான சட்டமே நிர்வாக சட்டம். இது நிர்வாகப் பொறுப்பிலுள்ளோர்களின் அமைப்பு, அதிகாரம் மற்றும் கடமைகளை நிர்ணயிக்கின்றது – தெளிவுபடுத்துக.

2. Explain the maxim 'Nemo debet esse - judex in propria causa' with the help of decided cases.

   "எவரும் அவருடைய வழக்கில் சமன் செய்து சீர்தூக்கும் நடுவர் போல் இரார்" என்ற சட்ட முதுமொழியினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு விளக்கவும்.

3. Discuss with the help of decided cases, the judicial control over delegated legislation in India.

   இந்தியாவில் ஒப்படைவு விதியாக்கத்தின் மீதுள்ள நீதிமன்றக் கட்டுப்பாட்டை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the privileges and immunities enjoyed by the Government in legal proceedings? Discuss with decided cases.

   வழக்கு நடவடிக்கைகளில் அரசாங்கத்தால் அனுபவிக்கப்படுகின்ற சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள் யாவை? தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் மூலம் விவாதிக்கவும்.

5. How far the Doctrine of Separation of powers is incorporated in Indian Constitution?

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு எந்த அளவிற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

6. Explain the Contractual Liability of the State with specific reference to 'R.D. Shetty vs International Airport Authority of India'.

அரசின் ஒப்பந்தம் குறித்த கடப்பாட்டை, 'ஆர்.டி. செட்டி எதிர் இந்திய பன்னாட்டு விமான நிலையக் குழுமம்' வழக்குடன் தொடர்புபடுத்தி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Post decisional hearing
முடிவுக்குப் பின் விசாரணை

(b) Lok ayuktha
லோக் ஆயுக்தா

(c) Estoppel
முரண்தடை

(d) Domestic Tribunals
உள்ளகத்துத் தீர்ப்பாயங்கள்

(e) Error of Jurisdiction
ஆள்வரைத் தவறு

(f) Locus standi
வழக்கீட்டுரிமை

(g) Excessive delegation
அளவிற்கதிகமான அதிகார ஒப்படைவு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ravi is detained by the Executive Magistrate claiming that his presence is dangerous to the security of the state. Later, finding that he was innocent, he was released. Now Ravi claims damages for the illegal detention from Government – Decide.

ரவியின் செயல்பாடு நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் என ஆட்சித்துறை நடுவரால் காவலில் வைக்கப்படுகின்றார். பின்பு அவர் அவ்வாறு ஆபத்து விளைவிக்கக்கூடிய நபர் இல்லை, எனக் கண்டு விடுவிக்கப்பட்டார். தன்னை சட்டத்திற்கு புறம்பாக காவலில் வைத்ததற்கு ரவி அரசிடமிருந்து இழப்பீடு கோருகிறார். முடிவு செய்க.

9. Sarju is an illiterate person. He requested to engage a lawyer to represent his matter in an enquiry against him, which was denied by the enquiry committee. Decide whether it will amount to violation of fair hearing?

சர்ஜு என்பவர் ஒரு படிக்காத நபர். அவருக்கு எதிரான விசாரணையில் அவர் வழக்கறிஞரை நியமித்துக் கொள்ள அனுமதி கோருகிறார். விசாரணைக் குழு அவரது கோரிக்கையை மறுக்கிறது. இச்செயல் நியாயமானக் கேட்டல் விதியை மீறியதாகுமா என்று முடிவு செய்க.

10. There was a provision in a Parent Act to publish the delegated legislation in local Tamil daily before implementation. But the government published the delegated legislation in an English daily. Decide the validity of the delegated legislation.

முதன்மை சட்டத்தின் கீழ் அரசால் ஆக்கப்படும் விதிகளை அவைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன் உள்ளூர் தமிழ் நாளேட்டில் வெளியிட வேண்டும் என சட்டம் வகை செய்கிறது. ஆனால் அரசானது அதை ஒரு ஆங்கில நாளேட்டில் வெளியிடுகிறது. அதிகார ஒப்படைவு விதியாக்கத்தின் செல்லும் தன்மையை ஆராய்க.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA4C**

**6552–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define the term "Lockout" under the Industrial Disputes Act, 1947 and discuss the procedure for lockout with the help of decided cases.

   1947–ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் "கதவடைப்பு" என்பதை வரையறை செய்க. கதவடைப்பிற்கான நடைமுறைகளை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியுடன் விவாதிக்க.

2. Explain how the Payment of Wages Act, 1936 protects the workers from exploitation.

   ஊதியம் வழங்கல் சட்டம், 1936 எவ்வாறு தொழிலாளர்களை சுரண்டலில் இருந்து பாதுகாக்கிறது என்பதை விளக்குக.

3. Identify the factors responsible for the depreciated status of Trade Unions in India and suggest the measures to strengthen Trade Union under Industrial democracy.

   இந்தியாவில் தொழிற்சங்கத்தின் வளர்ச்சியின்மைக்குக் காரணமான காரணிகளை அடையாளம் காணவும். மேலும் தொழிற்துறை ஜனநாயகத்தின் கீழ் தொழிற்சங்கத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Write a detailed note on "Worker's Participation in management".

   "நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கு" பற்றி விரிவான குறிப்பை எழுதுக.

5. Explain the provisions relating to certification of Standing Orders.

நிலையாணைகளை சான்றளித்தல் தொடர்பான வகையங்களை விளக்குக.

6. Discuss the procedure for fixation of minimum rates of wages.

குறைந்தபட்ச ஊதிய அளவு நிர்ணயம் செய்வதற்கான நடைமுறையை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Define Industrial Dispute under the Industrial Disputes Act, 1947.

தொழிற்தகராறுகள் சட்டம், 1947 ன் கீழ் தொழிற்தகராறு என்பதை வரையறு.

(b) Domestic Enquiry.

உள் விசாரணை.

(c) Modification of Standing Order.

நிலையாணையை திருத்தம் செய்தல்.

(d) Duty of employer to pay equal remuneration to men and women – Explain.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான ஊதியம் வழங்க வேண்டியது முதலாளியின் கடமை – விளக்குக.

(e) Living Wages.

வாழ்க்கை ஊதியம்.

(f) Fine under the payment of Wages Act, 1936.

1936ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அபராதங்கள்.

(g) Dissolution of Trade Union.

தொழிற்சங்கத்தினை கலைத்தல்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The appropriate Government referred an industrial dispute that existed in an Iron Industry for adjudication. During the Pendency of the proceedings the management and trade union arrived at a settlement. Decide the legality of the settlement.

இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தொழிற்துறை சச்சரவை உரிய அரசு தீர்ப்பாயத்திற்கு அனுப்பி வைத்தது. அச்சச்சரவு தீர்ப்பாயத்தின் நடவடிக்கை நிலுவையில் உள்ள போது, தொழிற்சாலை நிர்வாகமும் தொழிற்சங்கமும் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தின. இந்த உடன்படிக்கை சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை முடிவு செய்க.

9. A workman was dismissed on 11.02.2018. He raised an Industrial Dispute on 11.02.2024. Decide the maintainability of the dispute.

11.02.2018–ல் வேலை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர் 11.02.2024–ல் தொழில் தகராறு முன்னிடுகிறார். தொழில் தகராறின் செல்லுந்தன்மையைத் தீர்மானிக்க.

10. Ten members of a trade union sent the application for registration. Six members gave notice in writing of their dissolution from the application before it was registered. Decide whether the application for registration is still valid?

ஒரு தொழிற்சங்கத்தில் பத்து உறுப்பினர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் அனுப்பினார்கள். அவர்களில் ஆறு உறுப்பினர்கள் பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக எழுத்து மூலமாக தாங்கள் தொழிற்சங்க பதிவுக்காக அனுப்பிய விண்ணப்பத்திலிருந்து தங்களை விலக்கிக் கொள்வதாக அறிவித்தார்கள். தொழிற்சங்க பதிவுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பம் இன்னும் செல்லுபடியாகின்ற நிலையில் உள்ளதா என்பதை தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY
TA4D

Register No.

**6553–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain about the sources of the International Law.

   பன்னாட்டுச் சட்டத்தின் மூலாதாரங்களை விளக்குக.

2. International Law is a vanishing point of Jurisprudence – Discuss.

   சட்டவியலின் மறையும் புள்ளியில்தான் நாட்டிடைச் சட்டம் ஆரம்பமாகிறது – விவாதி.

3. Describe about the diplomatic privileges and immunities.

   தூதர்களின் சிறப்புரிமைகளையும், காப்புரிமைகளையும் பற்றி விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Differentiate International law and Municipal law.

   பன்னாட்டுச் சட்டத்தினையும் உள் நாட்டுச் சட்டத்தினையும் வேறுபடுத்துக.

5. How the states are recognized?

   நாடுகள் எவ்வாறு அங்கீகரிக்கப்படுகிறது?

6. Explain the constitution of International Court of Justice.

   பன்னாட்டு நீதிமன்றத்தின் கட்டமைப்பை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Liechtenstein vs Guatemala

லீச்டென்ஸ்டெய்ன்–எதிர்–குவாட்டிமாலா

(b) Franconia case

ஃப்ராங்கோனியா வழக்கு

(c) Double Criminality

இரட்டை குற்றத்தன்மை

(d) Monism

ஒரு பொருள் வாதம்

(e) Principle of Equidistance

சமதூரக் கோட்பாடு

(f) Monroe doctrine

மன்ரோ கோட்பாடு

(g) Geneva Conference

ஜெனிவா மாநாடு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State 'Y' government had sought to establish the international responsibility of State 'Z' in the ICJ for armed activities that had occurred on the territory of State 'Y'. The State 'Z' did not consent to the jurisdiction of ICJ. The State 'Y' has sought to establish the jurisdiction of the ICJ on the basis of Article – 9 of the Genocide Convention, 1948. However, the State 'Z' argued that it had signed the said convention with the reservation in relation to the provisions concerning ICJ's jurisdiction. Decide the legality of reservation made by the State 'Z' in relation to ICJ's jurisdiction with decided ICJ's case laws.

'Y' நாட்டின் எல்லைக்குள் நடந்த இராணுவ நடவடிக்கைக்காக 'Z' நாட்டை சர்வதேச பொறுப்புக்குள்ளாக்குவதற்காக 'Y' நாடு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. ஆனால் 'Z' நாடு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய எவ்வித இசைவும் கொடுக்கவில்லை. அதற்காக 'Z' நாட்டை சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வருவதற்காக 'Y' நாடானது 1948–ஆம் ஆண்டு இனப்படுகொலை ஒழிப்பு சாசனத்தின் உறுப்பு–9ன் படி 'Z' நாடானது சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வரும் என வாதிட்டது. இருப்பினும் 'Z' நாடனாது இனப்படுகொலை ஒழிப்பு சாசனத்தின் வகையம் சர்வதேச நீதிமன்றத்தின் பொருந்தும் தன்மைக்கு ஒதுக்கீடு செய்துள்ளதாக எதிர்வாதம் புரிந்தது. சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு பொருந்தும் தன்மையை மேற்படி சாசனத்திற்கு எதிராக ஒதுக்கீடு செய்தது சரியானதா என்பதை சர்வதேச நீதிமன்ற தீர்ப்புகளின் வழிகொண்டு தீர்மானி.

9. Mr. 'X' is a revolutionist of State 'A'. He was charged for treason and abetment of murder. During his transportation, he dramatically escaped by jumping into the sea and entered 'B' State, State 'B' police caught him and handed over to State 'C'. The authorities of the State 'A' demanded the State 'C' to extradite him because the rules concerning extradition were not observed and not followed under International law. Will State 'A' succeed?

திரு. 'X', என்பவர் 'அ' – நாட்டின் புரட்சியாளர். அவர் செய்த குற்றங்களுக்கான தேச துரோகம் மற்றும் கொலை செய்ய உடந்தை என்ற குற்றச்சாட்டுக்கான விசாரணைக்காக 'அ' நாட்டிற்கு கொண்டு செல்லும்போது வியத்தகுமுறையில் கடலில் குதித்துத் தப்பி 'ஆ' நாட்டிற்குள் நுழைந்தார். 'ஆ' நாட்டு காவலதிகாரி அவரை பிடித்து 'இ' நாட்டிடம் ஒப்படைத்துவிட்டார். 'அ' நாட்டு அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மீட்டொப்படைத்தல் குறித்த சர்வதேச சட்ட விதிகளை பின்பற்றவில்லையெனக் கூறி, திரு. 'X'ஐ மீண்டும் தங்களிடம் ஒப்படைக்குமாறு 'இ' நாட்டைக் கேட்டுக் கொண்டனர். இதில் 'அ' நாடு வெற்றி பெறுமா?

10. State A's embassy is situated in State 'B'. The State A's embassy officials have been attacked and taken as hostage by State 'B' nationals. Some of the officials of State A's embassy were injured and were not admitted in hospital. Whether State 'B' is responsible for the acts of its nationals to State 'A'? Decide with ICJ case laws.

'ஆ' நாட்டில் 'அ' நாட்டின் தூதரகம் அமைந்துள்ளது. 'ஆ' நாட்டினர் 'அ' நாட்டின் தூதரக அலுவலர்களை தாக்கியும் மற்றும் பிணையகைதிகளாக பிடித்து விட்டனர். இதில் 'அ' நாட்டின் தூதரக அலுவலர்களுக்கு காயத்தையும் ஏற்படுத்திவிட்டனர், மற்றும் அவர்களை மருத்துவமனையில் அனுமதிக்கவுமில்லை. அதில் நாடு 'அ–வுக்கு 'ஆ' நாட்டினர் செய்த செயலுக்கு 'ஆ' நாடு பொறுப்பாகுமா என்பதை சர்வதேச நீதிமன்றத்தின் வழக்குகளுடன் தீர்மானிக்க.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
* LIBRARY *

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

TA4F

Register No. | | | | | | | | |

6780–25

(For the candidates admitted from 2023–2024 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

BHARATIYA SAKSHYA ADHINIYAM, 2023.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is meant by Relevancy? Differentiate Relevancy from Admissibility.

   தொடர்புடைமை என்பதன் பொருள் யாது? தொடர்புடைமையிலிருந்து அனுமதிக்கத்தக்கதை வேறுபடுத்துக.

2. Distinguish between the 'Public Documents' and 'Private Documents' under Bharatiya Sakshya Adhiniyam. How are public documents proved?

   பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் 'பொது ஆவணங்கள்' மற்றும் 'தனியார் ஆவணங்கள்' வேறுபடுத்துக. பொது ஆவணங்கள் எவ்வாறு மெய்ப்பிக்கப்படுகின்றன?

3. Discuss the "Principles of Estoppel" as laid down in the Bharatiya Sakshiya Adhiniyam.

   "முரண்தடை பற்றிய கோட்பாடுகளை" பாரதிய சாட்சிய அதிநியம் சட்டத்தில் கூறியுள்ளபடி விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of 'Res Gestae'.

   'ஒன்றிய செயல்' கோட்பாட்டினை விளக்கவும்.

5. Discuss the provisions relating to 'Confession' under Bharatiya Sakshiya Adhiniyam.

பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தில், குற்ற ஏற்புரையைப் பற்றி கூறியுள்ள பிரிவுகள் குறித்து விவாதிக்கவும்.

6. Explain the privileged communication under the Bharatiya Sakshiya Adhiniyam.

பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் காப்புடைச் செய்திகளைப் பற்றி விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் <u>ஐந்திற்கு</u> சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Facts in issue

கேள்விக்குண்டான பொருண்மைகள்

(b) Circumstantial evidence

சூழ்நிலைச் சான்று

(c) Refreshing memory

நினைவை புதுப்பித்தல்

(d) Latent Ambiguity

உட்கிடை பொருள் மயக்கம்

(e) Hostile witness

பிறழ் சாட்சி

(f) Secondary evidence

சார்நிலை சான்று

(g) Dying declaration

மரண வாக்குமூலம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் <u>இரண்டிற்கு</u> சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' agrees to sell to 'B' for Rs. 10,000/– "my white horse". 'A' has two white horses. Can evidence be given of facts which of them was meant?

'A' என்பவர் 'B' என்பவரிடம் "என்னுடைய வெள்ளைக் குதிரை" – யினை ரூ. 10,000/-க்கு விற்பதாக ஒப்புக் கொள்கிறார். 'A'யிடம் இரண்டு வெள்ளைக் குதிரைகள் இருந்தன. எந்தக் குதிரையினை விற்க எண்ணம் என்பதற்கு உண்டான சங்கதி தொடர்பாக சாட்சியம் வழங்கலாமா?

9. 'A' is tried for having committed a crime at Chennai on a particular day. He leads evidence to prove the fact that on that day he was at New York. Is it relevant?

சென்னையில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஒரு கொலை செய்ததாக 'A' மீது வழக்கு ஒன்று விசாரணையில் உள்ளது. 'A' தான் அன்று நியூயார்க்கில் இருந்ததாக மெய்ப்பிக்க சான்றளிக்கிறார். இது தொடர்புடையதாகுமா?

10. An arrested person makes the following statement to the police. "I will show you where I have hidden my share from the bank robbery committed by me". Examine which portion of the above statement is admissible as evidence?

கைது செய்யப்பட்ட ஒருவர் காவலரிடம் கீழ்கண்டவாறு கூறுகிறார். "நான் செய்த வங்கிக் கொள்ளையில் என்னுடைய பங்கை எங்கு மறைத்து வைத்திருக்கிறேன் என்பதை உங்களுக்கு காண்பிக்கிறேன்". மேற்கூறிய வாக்குமூலத்தில் எந்தப் பகுதி சான்றாக எடுத்துக் கொள்ளப்படும்?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY